முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்
OS.170/2013

Witness PW 1

பெயர்: பத்மினி

க/பெ.: வீரப்பன்

இன்று (10/07/2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.
சத்தியமாக சொல்கிறேன்.

2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நான் தாக்கல் செய்துள்ள வாக்குமூலத்தில் " 24.7.2020ல் வெற்றிச்செல்வி, ராணி என்பவருக்கு உயில் எழுதி வைத்ததாக சொல்லியுள்ளேன்" என்றால் சரிதான். 19.12.2022 அன்று ஐஏ.1114/22 என்ற எண்ணில் 7.7.2020 அன்று வெற்றிச்செல்வி உயில் எழுதி வைத்துள்ளதாக ராணி என்பவர் தெரிவித்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ராணி என்பவர் ஐஏ.422/2024 என்ற எண்ணில் தாக்கல் செய்துள்ள பிரமாணப் பத்திரிக்கையில் 7.7.2020 தேதியில் வெற்றிச்செல்வி ராணி என்பவர் பெயருக்கு எழுதி வைத்துள்ளதாக தெரிவித்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. ராணி என்பவருக்குத் தான் தெரியும். ராணி என்பவரை இந்த வழக்கில் வாதிகள் தரப்பில் சாட்சியாக விசாரிக்க உள்ளேனா என்றால் நான் விசாரிக்கவில்லை. நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சிய பிரமாணப் பத்திரத்தை பற்றி ராணிக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதிகள் அனைவரும் ஒன்றாகத்தான் வழக்கை நடத்துகிறோம் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சிய பிரமாணப்பத்திரிக்கை தகவல் ராணி தான் கொடுத்தார். இறந்துபோன வெற்றிச்செல்வியின் கணவர் கலியபெருமாள் இந்த வழக்கில் பிரதிவாதியாக சேர்த்துள்ளோமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நாங்கள் தாக்கல் செய்த திருத்தல் வழக்குரையில் 14வது பத்தியில் "பின்னர் 2010ம் ஆண்டில் இருந்து வெற்றிச்செல்வி இறக்கும் வரை தேங்காய் திட்டில் உள்ள அவரது தாய் வீட்டில் அவரது சகோதரி ராணியின் பாதுகாப்பீல் வாழ்ந்து வந்தார். ஆகையால் அவர் இறப்பதற்கு முன்பு 24.7.2020 அன்று வழக்கு சொத்துக்களில் அவருக்கு உள்ள பாகத்தை 2ம் வாதியான ராணி அடையும் பொருட்டு ஒரு உயில் எழுதி வைத்துள்ளார்" என்று தாக்கல் செய்துள்ளோம் என்றால் அது நான் சொல்லவில்லை. அது ராணி தான் சொல்லியிருப்பார். நாங்கள் தாக்கல் செய்த திருத்தல் வழக்குரைக்கு 2 வது பிரதிவாதி 24,10,2024 அன்று கூடுதல் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது, எனது திருத்தல் வழக்குரையில் 14 வது பத்தியில் முதல் வரியில் வழக்குநிலுவையில் உள்ளது என்றும் 3 வது வாதி வெற்றிசெல்வீ 04,03,2010 அன்று இறந்து விட்டார் என்று சொல்லியுள்ளோம் என்றால் அது எனக்கு தெரியாது, வழக்கு தாக்கல் செய்யும் போது முக்கால் பாக மதிப்பு ஒன்றை கோடி என்று பிரதிவாதி தெரிவித்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது, நாங்கள் சொத்தில் அனுபவத்தில் இல்லாததால் சொத்து மதிப்பீடு செய்து நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளது தவறானது என்றால் சரியல்ல, நீதிமன்ற கட்டணத்திற்காக சொத்து சரியானபடி மதிப்பீடு செய்திருந்தால் இந்நீதிமன்ற ஆள்வரைக்கு வராது என்றுசொன்னால் சரியல்ல,

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கபடுகிறது,

**மறு விசாரணை இல்லை**

x

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

Principal Subordinate Judge ,
Villupuram